**Annex - 4**

| மாகாணம் | மாவட்டம் மற்றும் இலக்கம் | | Z புள்ளி | வேறு |
|---|---|---|---|---|
| | | | | |

| | |
|---|---|
| தேருநர் இடாப்பு பரிசோதனை சபை இல. | |
| நேர்முகப் பரீட்சை சபை இலக்கம் | |
| தொடர் இலக்கம் | |
| கணணி இலக்கம் | |

எனது இல. - ඊඩී/15/02/12/01/02/2025

தேசிய கல்வியியல் கல்லூரிகள் கிளை,

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,

இசுருபாய,

பத்தரமுல்ல.

2026.01 .

திரு/ திருமதி/ செல்வி ....................................................................

....................................................................

....................................................................

**2023 மற்றும் 2024 க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை – 2026**

| பாடநெறி இலக்கம் | பாடநெறி | மொழிமூலம் |
|---|---|---|
| | | சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் |

2023 அல்லது 2024 ஆம் ஆண்டு க.பொ.த (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில், மூன்று வருட முன் சேவை தேசிய போதனாவியல் டிப்ளோமா பாடநெறியைப் பயில்வதற்காக, 02 தொகுதி ஆசிரிய மாணவர்களை ஒரே நேரத்தில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆட்சேர்த்தல் 2026 எனும் தலைப்பில் 2025.11.07 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய, தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின்படி குறித்த பாடநெறிக்கான தகைமைகளைச் சரிபார்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை பின்வருமாறு நடைபெறும்.

**திகதி - 2026.................................... மாதம்.................**

**நேரம் - மு.ப. / பி.ப.. ...................................**

**இடம் - .......................................................... தேசிய கல்வியியல் கல்லூரி**

*இந்தக் கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் விடயங்களுக்கு அமைய, அங்கு குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் மற்றும் ஏனைய முறைப்படியான ஆவணங்கள் சகிதம், குறித்த திகதியில், குறித்த நேரத்திற்கு நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.*

- ***இந்த நேர்முகப் பரீட்சையானது உங்களது தகைமைகளைப் பரிசீலிப்பதற்காக நடத்தப்படுவதொன்றாகும் என்பதுடன், நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வது தெரிவு செய்யப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படமாட்டாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.***

*ஒப்பம்: பீ.டீ இரோஷினி கே. பரணகம*
*பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி)*
*கல்விச் செயலாளருக்காக*

........................................................
*பீடாதிபதி*
.......................................... *தேசிய கல்வியியல் கல்லூரி*
........................................................

*நேர்முகப்பரீட்சை தொடர்பான வினவல்களை மேற்கொள்ள வேண்டிய முகவரி*
.............................................................
.............................................................

*தொலைபேசி இலக்கம் -* ............................................. ..................................................

**இணைப்பு**

**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

01. பின்வரும் அனைத்துச் சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் அச்சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நகல் பிரதிகள் (Photocopies) நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

I. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம்
II. பிறப்புச் சான்றிதழ் (பதிவாளர் நாயகத்தினால் "இலவசமாக வழங்கப்பட்டது" எனக் குறிப்பிட்டு வழங்கப்பட்ட மூலப்பிரதியிலிருந்து பெறப்பட்ட சுருக்கம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)
III. தேசிய அடையாள அட்டை
IV. கல்விச் சான்றிதழ்கள் (இந்த இணைப்பின் இலக்கம் 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் இதற்குப் பொருந்தும்.)
V. நிரந்தர வசிப்பிடத்தைத் தீர்மானிப்பதற்காக 2025.11.07 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, **தங்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில்** பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- குறித்த மூன்று ஆண்டுகளில் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் மாத்திரம் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பின், எஞ்சிய ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கான நிரந்தர வசிப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய ஆவணங்கள்.
(உதாரணம்: குறித்த நிரந்தர வசிப்பிடப் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வசிப்பிடம் மற்றும் நடத்தை பற்றிய சான்றிதழ் (DS-04), ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை போன்றவை).

- குறித்த காலப்பகுதியில் நீங்கள் பெற்றோர் தவிர்ந்த வேறு ஒரு பாதுகாவலரின் கீழ் நிரந்தரமாக வசித்திருப்பின், அந்தப் பாதுகாவலர் தொடர்பான விபரங்களை காலப்பகுதியுடன் சேர்த்து, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் வசிப்பிடம் மற்றும் நடத்தை பற்றிய சான்றிதழின் (DS-04) – 'ஏனைய விடயங்கள்' எனும் நிரலின் கீழ் குறிப்பிட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- யாதேனும் ஒரு காரணத்திற்காக, குறித்த மூன்று வருடங்களுக்கோ அல்லது அவற்றில் சில வருடங்களுக்கோ தேருநர் இடாப்பினூடாக வசிப்பிடத்தை உறுதிப்படுத்த முடியாமல் போகும் சந்தர்ப்பங்களில், தேருநர் இடாப்பில் பதிவு செய்ய முடியாமல் போனமைக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள், கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் வசிப்பிடம் மற்றும் நடத்தை பற்றிய சான்றிதழின் (DS-04) 'ஏனைய விடயங்கள்' எனும் நிரலின் கீழ், குறித்த நிரந்தர

வசிப்பிடப் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**கவனத்தில் கொள்க.**

நிரந்தர வசிப்பிடத்தைத் தீர்மானிப்பதற்கு அவசியமான தகவல்கள் தேருநர் இடாப்பு தொடர்பான கணினிமயப்படுத்தப்பட்ட தரவுகளின் ஊடாகப் பரிசீலிக்கப்படுவதால், தேர்தல் அலுவலகங்கள் ஊடாக தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

- நேர்முகப்பரீட்சைக்கு தங்களால் கொண்டுவரப்படும் வசிப்பிடம் மற்றும் நடத்தை பற்றிய சான்றிதழிலேயே (DS-04) மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களையும் உள்ளடக்க முடியும்.

02. பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு தடவைக்கும், அதிபர் / பிரிவெனாதிபதி / பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதி மற்றும் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதி என்பன வீதம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

I. க.பொ.த. (உயர் தர) பெறுபேற்றுச் சான்றிதழ் (உரிய பாடசாலையிலிருந்து இச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் போது, எத்தனையாவது தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றினீர்கள் என்பது குறிப்பிடப்பட்டு, அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

II. க.பொ.த. (உயர் தர) பரீட்சையின் Z-புள்ளி குறிப்பிடப்பட்ட பெறுபேற்றுச் சான்றிதழ்.

III. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் / அடிப்படைப் பிரிவெனா இறுதிப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்.

IV. விசேட தகைமைகளை உறுதிப்படுத்தும் ஏனைய சான்றிதழ்கள் (குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் பாடநெறிக்குத் தொடர்புடையதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் இதற்குப் பொருந்தும்.)

03. ஏனைய சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள்

I. இறுதியாகக் கல்வி கற்ற பாடசாலையின் அதிபரினால் வழங்கப்பட்ட நடத்தைச் சான்றிதழ்.

II. கிராம உத்தியோகத்தரினால் 06 மாத காலத்திற்குள் வழங்கப்பட்ட வசிப்பிடம் மற்றும் நடத்தை பற்றிய சான்றிதழ் (DS-04).

III. பாடசாலை விலகல் சான்றிதழ் (மாணவர் செயலாற்றுகை பதிவேடு)

IV. பாடநெறிக்குத் தேவையான தேர்ச்சியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

V. வர்த்தமானி அறிவித்தலின் 9.7 ஆம் பிரிவின்படி, க.பொ.த. (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு, 'அரசின் இலவசக் கல்விச் சலுகையின்' கீழ் இயங்கும் அரச உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் தொழிற் பயிற்சிப் பாடநெறி / டிப்ளோமா பாடநெறி அல்லது உயர் டிப்ளோமா பாடநெறி ஒன்றிற்கு உள்வாரி மாணவராகப் பதிவு செய்திருப்பின், அது தொடர்பான ஆவணங்கள்.

VI. உங்களால் நிகழ்நிலை முறைமையின் (Online System) ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதி (PDF)

**கவனத்தில் கொள்க :-**

விண்ணப்பிக்கும் போதோ அல்லது அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளும் போதோ ஏற்பட்ட பல்வேறு தொழில்நுட்பச் கோளாறுகள் காரணமாக, அச்சிடப்பட்ட பிரதியை (PDF) பெற்றுக்கொள்ள முடியாமல் போன விண்ணப்பத்தாரர்கள், அந்தப் பிரதி இல்லாமலேயே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை. எனவே, தங்களிடம் அந்தப் பிரதி இல்லாமை குறித்து கல்வி அமைச்சிடமோ அல்லது தேசிய கல்வியியல் கல்லூரிகளிடமோ வினவல்களை மேற்கொள்ளக் கூடாது என்பது வலியுறுத்தப்படுகின்றது.

04. விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்

I. சுயவிபரக் கோவை

II. திருமணமாகதவர் என்பதற்கான பிரகடனம் (கல்வியியல் கல்லூரியின் பிரவேசத்திற்காக விண்ணப்பிக்கும் போது / நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் போது திருமணம் பதிவு செய்யப்படவில்லை / விவாகரத்து பெறவில்லை என்பதற்கான பிரகடனம்)

III. அரசாங்க அல்லது அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளில், அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பிரிவெனாக்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் நியமனம் பெறவில்லை அல்லது தெரிவு செய்யப்படவில்லை என்பதற்கான பிரகடனம்.

IV. தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றில் பாடநெறியொன்றைப் பயின்று கொண்டிருக்கும் போது விலகிச் செல்லவில்லை என்பதுடன், தற்போது பயின்று கொண்டிருக்கவில்லை எனவும், பயின்று முடித்திருக்கவில்லை எனவும், ஒழுக்காற்று காரணங்களுக்காக அல்லது வேறு காரணங்களுக்காக தேசிய கல்வியியல் கல்லூரி ஒன்றினால் மாணவர் தகைமை இரத்து செய்யப்படவில்லை என்பதுமான பிரகடனம்.

V. அரசாங்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கப் பல்கலைக்கழக நிறுவனம் ஒன்றில் க.பொ.த (உயர் தர) தகைமைகளின் ஊடாக இணைத்துக் கொள்ளப்படும் பட்டப்படிப்பு ஒன்றைப் பயில்வதற்காக "அரசின் இலவசக் கல்விச் சலுகையின்" கீழ் <u>உள்வாரி மாணவராகப் பதிவு செய்யப்படவில்லை என்பதும்</u>, அத்தகைய பாடநெறி ஒன்றைப் பயின்று கொண்டிருக்கவில்லை என்பதும், அத்தகைய பட்டப்படிப்பு ஒன்றைப்

பயின்று முடிக்கவில்லை என்பதும், குறித்த பாடநெறி ஒன்றில் பதிவு செய்யப்பட்டிருந்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் பதிவை இரத்துச் செய்திருக்கவில்லை என்பதும் அல்லது வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் / நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட பின்னர் மேற்கூறப்பட்ட நிறுவனம் ஒன்றில் குறித்த பாடநெறிக்காகப் பதிவு செய்யப்பட்டு பின்னர் அதனை இரத்துச் செய்திருக்கவில்லை என்பதுமான பிரகடனம்.

மேலே குறிப்பிடப்பட்ட பிரகடனங்கள் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு, சமாதான நீதவான் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு கொண்டு வரப்பட வேண்டும்.

05. நேர்முகப்பரீட்சைக்காகச் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் மற்றும் பிரகடனங்கள் ஆகியவற்றை நேர்முகப் பரீட்சை நடைபெறும் நாளிலேயே சமர்ப்பித்தல் கட்டாயமானது. அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்கள், வர்த்தமானி அறிவித்தலின் 7.2 ஆம் பிரிவின்படி தெரிவு செய்தல் நடவடிக்கைகளின் போது கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.

06. நேர்முகப் பரீட்சைக்காக தங்களால் சமர்ப்பிக்கப்படும் அனைத்துச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்களின் பட்டியலை உங்களது சொந்தக் கையெழுத்திலேயே எழுதி, அதனை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தீர்கள் என்பதை உறுதிப்படுத்தி, நேர்முகப் பரீட்சையின் இறுதியில் நேர்முகப் பரீட்சை சபையிடம் ஒப்படைக்க வேண்டும்.

07. பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தனது பெயரிற்கும் மற்றும்/அல்லது ஏனைய சான்றிதழ்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரிற்கும் இடையில் யாதேனும் வித்தியாசம் காணப்படின், அது சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

08. உங்களால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆவணங்களினதும் நிழற்படப் பிரதிகளின் கீழ், உங்கள் சொந்தக் கையெழுத்தில் "இச்சான்றிதழ் மூலப்பிரதியின் உண்மைப் பிரதி என உறுதிப்படுத்துகின்றேன்" என்று தெளிவாக எழுதி உங்களாலேயே உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் மூலப்பிரதிகள் மற்றும் நிழற்படப் பிரதிகள் என்பவற்றைத் தனித்தனியாக இரண்டு கோவைகளாக தயார் செய்து நேர்முகப்பரீட்சைக்குக் கொண்டு வர வேண்டும்.

09. நீங்கள் குறித்த திகதியில் குறித்த நேரத்திற்கு ஆசிரியர் தொழிலுக்குப் பொருத்தமான ஆடையில் நேர்முகப் பரீட்சைக்குக் கட்டாயமாகச் சமூகமளிக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணத்தினால் குறித்த திகதியில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க முடியாவிட்டால், அது குறித்து சம்பந்தப்பட்ட கல்வியியல் கல்லூரிக்கு தந்தி மூலம் தாமதமின்றி அறிவிப்பது கட்டாயமாகும். (அதற்கு மேலதிகமாக தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொள்வதும் மிகவும் பொருத்தமானது.) குறித்த திகதியில் முன்னறிவித்தல் இன்றி நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்கத்

தவறினால், அந்த விண்ணப்பத்தாரருக்குப் பதிலாக குறித்த மாவட்டத்தின் திறமை ஒழுங்குவரிசைப்படி வேறு ஒரு விண்ணப்பத்தாரர் அழைக்கப்படுவார் என்பதுடன், சமூகமளிக்காத விண்ணப்பத்தாரர்கள் குறித்து மீண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது. அதேபோல், எக்காரணம் கொண்டும் நீங்கள் விண்ணப்பித்துள்ள பாடநெறி மற்றும் கோரியுள்ள மொழிமூலத்தை மாற்ற முடியாது.

10. நேர்முகப் பரீட்சை நாளன்று அதில் கலந்துகொள்வதற்கு முன்னர், இந்த அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய இலக்கத்தைக் கொண்ட தேருநர் இடாப்பு சரிபார்க்கும் சபையிடம் தேருநர் இடாப்பில் தரவுகளைச் சரிபார்ப்பதற்காகச் சமூகமளிப்பது கட்டாயமாகும்.

11. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதற்காக மாத்திரம் நீங்கள் ஏதேனும் ஒரு பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டதாகவோ அல்லது அதற்கான தகைமைகளைப் பெற்றுவிட்டதாகவோ எக்காரணம் கொண்டும் கருதப்படக் கூடாது. முதலாம் நேர்முகப் பரீட்சையின் படி தகைமைகள் போதுமானதாக இருப்பின் மாத்திரமே, இரண்டாம் முறை தகைமைகளைச் சரிபார்ப்பதற்கும் அதற்கமைய உரிய கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்வதற்கும் நீங்கள் அழைக்கப்படுவீர்கள். எவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்ட யாதேனும் ஒரு ஆவணம் வர்த்தமானி அறிவித்தலுக்கு முரணாக போலியானது அல்லது மோசடியானது எனப் பின்னர் தெரியவந்தால், நீங்கள் பயிற்சியிலிருந்து / சேவையிலிருந்து நீக்கப்படுவீர்கள் என்பதுடன், அரசாங்க சேவையின் எவ்வித நியமனத்திற்கும் தகுதியற்றவர் ஆவீர்கள் என்பதும் வலியுறுத்திக் கூறப்படுகிறது.

**<u>நேர்முகப் பரீட்சை நடைபெறும் நிறுவனத்திற்கு வருகை தரும் பயணப் பாதை.</u>**